பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி

# தமிழ் திருச்சபை

## உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்....

ஏசாயா . 61:7

செய்தி மலர்

ஜுலை 2011

மலர் 12
இதழ் 03



# செயலாளரிடமிருந்து

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம் சபையின் ஒவ்வொரு மக்களையும் பாதுகாத்து நடத்தி வந்தபடியால் நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த கடமைபட்டவர்களாக இருக்கிறோம். கடந்த மாத ஆராதனைகள், ஊழியங்கள் எல்லாவற்றிலும் கர்த்தர் தம் நாமமகிமைக்கென்று நடத்தி தந்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். கர்த்தரின் வழி நடத்துதலை நன்கு அறிந்த தாவீது சொல்லுகிறார், இந்த கர்த்தரை தெய்வமாக கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது என்று.

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பானவர்களே வேதத்தில் அநேக இடத்தில் பாக்கியவான்கள் என்று நாம் வாசிக்கிறோம். உலக மனிதர்களை உலக சம்பத்துக்கள் ஏராளம் உள்ளவர்களை பார்த்து பாக்கியவான்கள் என்று கூறுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால் வேதம் சொல்லுகிறது யாக்கோபு 1:12ல் சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் என்று வாசிக்கிறோம். உலகத்தில் வாழ்கின்ற மனிதன் பல விதமான சோதனைக்கு ஆளாகிறான். அநேகர் தங்களுக்கு ஏற்படுகின்ற சோதனை வேளைகளில் சோர்ந்து போய் தங்களின் உயிரையும் கூட மாய்த்து கொள்கிறதை நாம் அன்றாடம் பார்க்கிறோம். ஆனால் நமக்கோ அது மேலான பாக்கியம் என்று வேதம் சொல்லுகிறது. ஏனென்றால் சோதனையின் மூலம் மனிதன் புது பெலன் அடைகிறான் என்று அறிந்து கொள்ள முடியும். அம்மை நோய் வரும் பொழுது வருத்தமடைகிறார்கள் ஆனால் அதிலும் ஒரு சந்தோஷமான விஷயம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது என்று விஞ்ஞானம் சொல்லுகிறது. அதனால் நோய் எதிர்ப்பு சக்திதானே பெருகுகிறது என்று சாதாரணமாக நாம் எடுத்து கொள்வது இல்லை, அந்த நேரத்தில் சத்தான உணவை உட்கொள்ள வேண்டியதும் அவசியமாக காணப்படுகிறது. அப்படி நாம் சத்தான உணவு எடுத்துக் கொள்ளும் பொழுது உடல் சீக்கிரத்தில் குணமடைகிறது என்று நாம் அறிகிற ஒன்று.

சோதனை யாருக்கு அதிகம் ஏற்படுகிறது என்று பார்த்தோமானால் வேதத்தின் அடிப்படையில் எபி 12:6ல் கர்த்தர் எவனிடத்தில் அன்புகூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து... கர்த்தர் யாரிடத்தில் அதிகம் அன்பு கூறுகிறாரோ.? அவர்களுக்கு சோதனை வருகிறது

சங் 34:19ல் நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். நீதிமானுக்கு துன்பம் உண்டு

என்று வேதம் கூறுகிறது.

2 பேதுரு 2:19 ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். தேவன் மேல் பற்றுதலாய் இருக்கிறவனுக்கும் சோதனை ஏற்படுகிறது.

1 பேதுரு 4:16 ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபடுகிறான் அதிலும் அவனுக்கு சோதனை.

1 பேதுரு 1: 6,7. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக வேலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். கர்த்தரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனுக்கும் சோதனை வருகிறது.

ஏன் இவ்விதமான சோதனை கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுகிறது. துன்மார்க்கனுக்கும் கர்த்தரை அறியாதவனுக்கும். இவ்விதமான சோதனை ஏற்படுவதில்லையே? அவர்கள் சுகமாய் சம்பூர்ணமாய் வாழ்கிறார்கள், என்று அநேக நேரங்களில் நாம் நமக்குள்ளே கேள்வி எழுப்புபவர்களாக இருக்கிறோம். வேதத்தில் அதற்கான விடைகளையும் நாம் கண்டு கொள்ளமுடியும். (உபா 8 : 2,3) முதலாவது சோதனை வேளைகளில் கர்த்தர் எவ்விதமாய் நமக்கு உதவி செய்வார், எவ்விதமாக இந்த சோதனைகளை மேற் கொண்டு ஜெயம் பெற்றோம் என்று அமர்ந்திருந்து சிந்தித்து பார்த்தால் நாம் வியக்கும் வண்ணமாகவும் நம்முடைய சிந்தனைக்கு அப்பார்ப்பட்ட விதமாகவும் கர்த்தர் நம் சோதனை நேரத்தில் நமக்கு உதவி செய்ததையும் பெலப்படுத்தின விதத்தையும் உணர்ந்து கொள்ள முடியும்.

இரண்டாவதாக சோதனை நேரத்தில் முழு மனதோடு கர்த்தரிடத்தில் அன்பு கூறுகிறோமா? இல்லையா? (உபா 13:3) என்பதை கர்த்தர் சோதித்து பார்த்து நம்மூலம் மகிழ்ச்சி அடைகிறார். நாம் சோதனைகளை மேற்கொள்ளும் போது கர்த்தர் மகிழ்ச்சி அடைகிறார் என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

மூன்றாவதாக நியா 2:21 நம் முற்பிதாக்கள் நடந்தது போல, நாமும் கர்த்தரின் வழியில் நடக்கிறோமா இல்லையா? என்பதை கர்த்தர் அறிந்து கொள்ளும்படியான சோதனையாக இது அமைகிறது.

ரோமர் 5:3ன்படி சோதனையானது கர்த்தர் நடத்தும் ஒரு தேர்வு என்று பார்க்கிறோம். உலக பிரகாரமான படிப்பு தேர்வுகளில் நன்றாக படித்து தேர்வு எழுதி அதிக மதிப்பெண் பெறும்போது எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகிறதோ, அது போல சோதனையானது நம்முடைய கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கைக்கு கர்த்தர் அனுப்புகிற ஒரு தேர்வாக காணப்படுகிறது.

அடுத்தபடியாக (சங்; 105 :19) கர்த்தர் நம்முடைய வாழ்வை குறித்து கொண்டிருக்கிற நோக்கம் நிறைவேறும்படியாக இந்த சோதனைகள் ஏற்படுகிறது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்கள் நிறைவேற இந்த சோதனைகள் நமக்கு

அனுமதிக்கப்படுகிறது.

யோவான் 15:7,8 கர்த்தர் விரும்புகின்றபடி கனி கொடுக்கத்தக்கதாக, நம்மை மாற்றும்படியாக சோதனையின் ஊடாக நாம் நடத்தப்படுகிறோம். முடிவில் இயேசுவின் சீஷர்கள் என்று மற்றவர்களால் அழைக்கப்படுகிறவர்களாக நாம் மாறுகிறோம்.

கடைசியாக இவ்விதமான சூழ்நிலைகளில் நாம் கடந்து வரும்பொழுது யாக் 1:12ன் படி கர்த்தருக்கு உத்தம சிநேகிதனாக மாறுகிறவர்களாகிறோம், கர்த்தரின் அன்பிற்குறியவர்களாக மாறுகிறோம் ஜீவ கிரீடத்தை பெறுகிறவர்களாக மாறுகிறோம்.

கர்த்தர்தாமே உங்களோடு கூட இருந்து வசனத்தின்படி அழிவில்லாத ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்ள உங்களுடைய சோதனை காலங்களில் உதவியாய் உங்களோடு இருப்பாராக! ஆமென்

வரும் மாதத்தின் சபையின் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள் ஊழியங்களில் பங்கு பெறுங்கள் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கர்த்தரின் பணியில்
அன்பு சகோதரன் : **ஜஸ்டின் சுந்தரராஜ்**

## பெற்றோர்களுக்கு ஒரு டிப்ஸ்
## (வேதத்தின் அடிப்படையில்)

1. கிறிஸ்துவ வாழ்க்கையை கற்றுக் கொடு (நீதி 22:6)
2. தேவையானால் தண்டனை கொடு ( நீதி 22:15)
3. முன்மாதிரியாக வாழ் (2 தீமோ 2:5)
4. பிள்ளைகளுக்கு நாள்தோறும் வேதம் வாசிக்க கற்றுக்கொடு (சங் 119:9)
5. ஜெபிக்க கற்றுக் கொடு. ( மத் 18:20)
6. தன் கைகளால் வேலை செய்ய கற்றுக் கொடு( பலம்பல் 3 :27)
7. ஆவிக்குரியவைகளுக்கு முதலிடம் கொடுக்கச் சொல்(1 தீமோ 1:8)
8. பெரியோர்களை மதிக்க கற்றுக் கொடு ( 1 பேதுரு 5:5)
9. தூய்மையின் மேன்மையை உணர்த்து ( 1 தீமோ 5:22)
10. ஒழுங்காக சபை வழிபாட்டிற்கும், கூட்டங்களுக்கும் செல்வதில் முன்மாதிரியாக இரு (எபி 10:25)
11. நாட்டின் சட்டங்களுக்கு கீழ்படிய கற்றுக் கொடு ( ரோமர் 3:1)
12. நன்னடத்தை நற்பயனைத்தை தரும் என்பதை விளக்கி சொல் ( ரோமர் 12:17)

# இரட்டிப்பான பலன்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணகர்த்தராகிய அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்!

வாழ்க்கையில் ஏமாற்றங்கள், ஆசீர்வாதங்களை எதிர்பார்த்த இடத்தில் இழப்புகள், நம்பினவர்கள் கைவிட்டார்கள், எதிர்பார்த்த காரியங்களில் தோல்வி, மற்றவர்களுடைய நகைப்புக்கும், நிந்தைக்கும் உள்ளாகி வெட்கமான நிலைமைக்குள் புதையுண்டு அகப்பட்டிருக்கின்ற நிர்பந்தமான சூழ்நிலைகளை பிறரோடும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தடுமாறி நிற்கின்ற உங்களைப் பார்த்துத் தேவன் சொல்லுகிறார்.

"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக, இரண்டத்தனையாய்ப் பலன் வரும் (ஏசாயா - 61:7)

நம்முடைய தேவன், தம்முடைய பிள்ளைகள் வெட்கம் அனுபவிப்பதைப் பார்த்து அமைதியாய் இருக்கிறவர் அல்ல. உங்களை வெட்கத்துக்குள்ளாக்கும் சத்துரு ஜெயம் பெறாதபடி பாதுகாத்து, வெட்கம் அனுபவிக்கிற அதே ஸ்தானத்தில் தமது இரட்டிப்பான பலனை அருளி ஆசீர்வதித்துக் கனப்படுத்துகிற தேவன்!

வேதத்தில் நாம் பார்க்கும்போது யோபுவின் வாழ்வில் வெட்கத்துக்குள்ளாக்கின சிறையிருப்பின் வாழ்வைமாற்றி, இரட்டிப்பான பலனால் நிரப்பி, வெட்கத்தை அனுபவித்த அதே இடத்தில் யோபுவை தேவன் உயர்த்தினார்! (யோபு-42:10).

இதே நம்முடைய தேவன் உங்களையும் எல்லா இக்கட்டுக்கும், வெட்கத்துக்கும் நீங்கலாக்கி இரட்டிப்பான பலனால் நிரப்பி உங்களை உயர்த்தும்படிக்கு

### 1. எக்காலத்திலும் கர்த்தரைத்துதியுங்கள்.

யோபு சுகமாய் வாழ்ந்திருந்த நாட்களில் ஒருநாள் யோபுவுக்கு இருந்த ஐசுவரியங்கள் முதல் பிள்ளைகள் வரைக்கும் யோபுவுக்கென்று இருந்த எல்லாம் அழிக்கப்பட்டுப் போயிற்று (யோபு 1:13-19) எல்லாவற்றையும் இழந்து தனித்தவனாய் தரித்திரத்தில் தள்ளப்பட்ட செய்தி வந்தபோது அந்த கொடிய இழப்பில் "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"(யோபு 1:21) என்று தேவனை துதித்தார். இழப்பிலும் தேவனை துதிக்கின்ற வாழ்வில் தேவன் தமது இரட்டிப்பான ஆசீர்வாதத்தை தந்து நம்மை உயர்த்துகிறார். தாவீதின் அனுபவத்தில் அபிமெலேக்கால் துரத்திவிடப்பட்ட நிர்பந்தமான நிலைமை வந்த போது சொல்கிறார். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர்துதி எப்போதும் என்வாயிலிருக்கும் (சங்கீதம் 34:1).

எனக்கு அன்பானவர்களே!

இழந்தேன் என்று கூறி வாழ்வில் சந்திக்கின்ற இழப்புகளை, அனுகூலமற்ற சூழ்நிலைகளை எண்ணி சோர்ந்து போகாமல் எல்லாவற்றிர்க்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். காரணம், நாம் இந்த உலகத்தில் வரும்போது எதையும் கொண்டுவரவில்லையே, மட்டுமல்ல நாம் போகும்போது எதையும் கொண்டுபோவதுமில்லை. ஆகையால் எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு கிருபையினால்

பாதுகாத்து நடத்தி வருகின்றார் அல்லவா! அதற்காக அக மகிழ்வுடன் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள், இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள், பல தீமையான காரியங்கள் வாழ்வை நெருக்கும் போது கர்த்தரை துதிக்க! துதிக்க! உங்கள் வாழ்வை அழிக்க சோதனைகனை கொண்டு வருகிற பொல்லாத சாத்தான் உங்களை விட்டு ஓடிப்போவான் இரட்டிப்பான ஆசீர்வாதத்தின் வாசல் உங்களுக்காக திறக்கப்படுவதை கண்டு அனுபவிப்பீர்கள்!

## 2.பாவத்துக்கு இடம் கொடாதிருங்கள்:

"இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப்பற்றி குறை சொல்லவுமில்லை". (யோபு 1:22)

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வில் சோதனைகளை கொண்டுவந்து தேவனுக்கு விரோதமாக பேசி பாவத்துக்கு இடம் கொடுக்கசெய்து தேவனை விட்டுவிலகச் செய்வதே பிசாசின் தந்திரம். ஆகையால், பிசாசுக்கு எதிர்த்து நின்று பரிசுத்த வாழ்வை காத்துக்கொள்ள தெளிந்த புத்தியுள்ளவர்களாக விழிப்புடன் இருங்கள்

"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" (ஏசாயா 59:2)

தன் மனைவியினால் வெறுக்கப்பட்ட நிர்ப்பந்தமான வேதனையின் உச்சக்கட்டத்திலும் யோபு பாவம் செய்யாதபடி தன்னைக் காத்துக்கொண்டார். (யோபு 2:10)

எந்த சூழ்நிலையிலும், வார்த்தையிலும், செய்கையிலும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி பரிசுத்தத்திலும், உத்தமத்திலும் நிலைநிற்க அற்பணியுங்கள் வெட்கத்துக்கு பதிலாக இரண்டத்தனையான பலனை பெற்றுக்கொள்வீர்கள்.

## 3.பிறருக்காக ஜெபியுங்கள்:

"யோபு தன் சினேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றை பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்". (யோபு 42:10)

யோபு சினேகிதருக்காக வேண்டுதல் செய்தார், இவர்கள் யோபுவின் உபத்திரவத்தில் யோபுவை நித்தித்தவர்கள் (யோபு 4:5-9). எனவே தான் யோபு சொன்னார் என் சிநேகிதர் என்னை பரிகாசம் பண்ணுகிறார்கள். வேதம் சொல்லுகிறது, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். மற்றவர்களின் மீட்புக்காக தாகத்தோடும், ஆத்துமபாரத்தோடும், கிறிஸ்துவின் அன்பில் நிறைந்தவர்களாய் உங்களை அர்ப்பணியுங்கள். கட்டாயம் தேவன் உங்கள் சிறையிருப்பை, நிந்தையை, வெட்கமான நிலைமையை மாற்றி நீங்கள் வெட்கத்தை அனுபவிக்கிற அதே இடத்தில் உங்களை ஆசீர்வாதமாக மாற்றி உயர்த்தி உங்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச்செய்வார்.

கிருபை உங்களோடிருப்பதாக!

அன்பரின் பணியில்

Rev.T.சாமுவேல்.

# ஊழியர்கள் பகுதி

**சீனாவுக்கு சென்ற ஒரு மிஷனரி தன் ஸ்தாபனத்தாருக்கு, நான் தங்கி ஊழியம் செய்கிற பட்டனம் கடினமுள்ளதாய் இருக்கிறது இரட்சிக்கப்படுவதற்கு சாத்தியமே இல்லை என்று எழுதி அனுப்பினாராம், ஸ்தாபனத்தார் மறுபதிலாக கண்ணீர்விட முயற்சி செய் (**Try Tears**) என்று பதில் எழுதினார்களாம்.**

**தேவ மனுஷன் ஆத்தும பாரத்தோடு கண்ணீர் சிந்த வேண்டும் நிச்சயம் பலன் உண்டு.**

**தேவனுடைய மனுஷன் : ஓட வேண்டும், நாடவேண்டும், போராட வேண்டும் -** Flee - Follow - Fight

1 **தீமோத்தேயு** 6:10,11. **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.**

**நாடவேண்டும் : எவைகளை? நீதி, தேவபக்தி, விசுவசம், அன்பு, பொறுமை, சாந்தகுணத்தை நாடவேண்டும்.**

**போராட வேண்டும்: விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடவேண்டும் மேற்கூறப்பட்ட யாவையும் செய்கிற தேவ மனுஷர்களாய் நாம் இருக்கவேண்டும்.**

**தேவ மனுஷன் தேரினவனாகவும், எந்த நற்கிரியைகளையும் செய்ய தகுதியுள்ளவனாய் இருக்க வேண்டும்.**

**2 தீமோத்தேயு 3:16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேரினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,**

**சிலர் வேதாகமத்தை படிக்காமல் ஆவியானவர் எனக்கு அருள் செய்வார் என்ற எண்ணத்தோடு பிரசங்க மேடையில் நிற்பது ஆபத்தை உண்டாக்கிவிடும். கண்டிப்பாக வேதத்தை நன்றாக படிக்க வேண்டும். முடிந்த வரையில் தேவ ஆவியானவரின் பெலத்தினால் தேவ ஊழியர்கள் எழுதிய வேத சம்மந்தப்பட்ட புத்தகத்தை வாங்கி படிக்கலாம்.**

**பவுல் நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல்.... என்று அறிக்கையிடுகிறார். ஆகிலும் நான் முற்றிலும் தேறவில்லை என்று சொல்லுகிறவனாய் கருதப்படுகிறான்.**

**உங்களுக்கு கொடுக்கப்பட்ட சபையாரை எல்லா விசுவாசிகளையும்தேறினவர்களாய் நிறுத்தும் பொறுப்பு உங்களிடத்தில் இருக்கிறது. எனவே நீங்கள் வேத வாக்கியத்தில் தேறினவர்களாய் இருக்கவேண்டும். நமது ஊழியங்களை முடித்து நாம் பரலோகம் செல்லும் போது நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல உத்தம ஊழியக்காரனே என்று நம்மை அழைக்கும் போது எவ்வளவு மேன்மையாய் இருக்கும் அல்லவா!**

**உங்களை அழைத்து உலகத்தில் வைத்து அவர் நிறைவேற்ற நினைத்த காரியங்களை உங்களை கொண்டு நிச்சயம் நிறைவேற்றுவார் ஏனெனில் அழைத்தவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார் (இன்னும் தொடரும்)**

**(நன்றி இயேசு ஜீவிக்கிறார் ஊழியம்)**

# 2011 ஜூன் மாத வேத வினாவிற்கான பதில்கள்.

1. இயேசு - லூக்கா 3: 21
2. இயேசு - லூக்கா 18: 1
3. இயேசு - லூக்கா 19: 10
4. நாயீன் ஊர் விதவையின் மகன் - லூக்கா 7: 11,15
5. லாசரு - லூக்கா 16: 20,21
6. சிமியோன் - லூக்கா 2: 29
7. இயேசு - லூக்கா 4: 46
8. லூக்கா 1: 31ல்
9. மார்த்தாள் - லூக்கா 10: 40
10. தேவதூதன் - லூக்கா 1: 37
11. பானுவேல் - லூக்கா 2: 36,37
12. இளைய குமாரன் - லூக்கா 15: 18,21
13. இளைய குமாரன் - லூக்கா 15: 20
14. சீஷர்கள் - லூக்கா 24: 30,31
15. லாசரு - லூக்கா 16: 22, 23

## 2011 ஜூன் மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. அனுஷுயா டேவிட்சன்
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்
சகோதரி. S.R. ஃபிரீடா சிங்
சகோதரி. செலின் சோபினா மேரி

சகோதரி. சாந்தி சீனிவாசன்
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. குமுதினி வில்ஸன்
சகோதரி. தயா இயேசுரெத்தினம்
சகோதரி. பிங்கி ஷாம்
சகோதரி. சித்ரா ஞானசுரேஷ்

சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். டேவிட் ஜெயகுமார்

சகோதரர். ராஜாசிங்

**சபையின் வாக்குத்தத்தம் 2011**

கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார் கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்

சங் 29:11

# 2011 ஜுலை மாத வேத வினா பகுதி

1. திவ்விய சவுந்தர்யமுள்ளவனாயிருந்தவன் யார்?

2. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவன் யார்?

3. ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தவர்கள் யார்?

4. மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களைபற்றி வாசிப்பதெங்கே ?

5. வேதாமங்களில் வல்லவன் எனப்பட்டது யார்?

6. கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் அவர்கள் யார் ?

7. யாருடைய முகம் தேவதூதன் முகம் போலிருந்தது?

8. சகல பட்டினங்களிலும் சுவிஷேசத்தை பிரசங்கித்துக் கொண்டு வந்தவர் யார் ?

9. அந்தியோகியாவிலே சஞ்சரித்து, கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கித்து கொண்டிருந்த இருவர் யார் ?

10. தகப்பன் கிரேக்கன், தாய் யூதஸ்திரி, இவர்களுக்கு பிறந்த மகன் யார்?

11. இரத்தாம்பரம் விற்று வந்த ஒரு ஸ்திரி யார்?

12. பவுலை வாயில் அடியுங்கள் என்று சொன்ன பிரதான ஆசாரியன் யார்?

13. தன் வீட்டாரோடு இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஜெபாலயத் தலைவன் யார்?

14. நியாசனத்துக்கு முன்பாக அடிபட்ட ஜெபாலாயத் தலைவன் யார்?

15. கிறிஸ்துவின் சீஷர்களை ஜெப ஆலயங்களில் வைத்து அடித்தவன் யார்?

விடைகளை வருகின்ற **22-7-2011** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் (99870126) அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாமஸ் (66810423) அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஸ்டீ.ஃபன் (65868048) அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

## இந்த மாதம் பிறந்த நாளைச் சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்: உன் தேவனாகிய கர்த்தர்....... உன்னை ஆசீர்வதிப்பார் , : உபா 28:8

செல்வன். ஏனோக் ஜோன்
செல்வன். ஆல்வின் ஜீலியஸ்
செல்வன். ஷெரின் ஜான்
செல்வன். கபிலன்
செல்வன். அனீஷ்குமார்
செல்வன். ஜோசப் பிரின்ஸ்
செல்வன். ஷெர்வின் டைடஸ்
செல்வன். சதீஷ் ஜெயசந்திரன்
செல்வன். ரூபன் பொன்ராஜ்
செல்வன். மோனித்ராஜ் வெங்கடேஷ்

செல்வி. சாரோன் கிருபா
செல்வி. ஜெனி:ப்ர் ரெத்தினம்
செல்வி. லீனா வில்கின்ஸ்
செல்வி. ஜியோனா ஷேரன்
செல்வி. ஜோஸ்பின் அந்தோனிசாமி
செல்வி. ஜெனிடா விசு

சகோதரி. எஸ்தர் ராணி
சகோதரி. விக்டோரியா ஜோச:ப்
சகோதரி. ரூத் ஷீபா பிராங்
சகோதரி. பவானி ஆரோக்கியதாஸ்
சகோதரி. ஹெப்சிபா ஜேம்ஸ்
சகோதரி. சாந்தி ஜெயசேகர்

சகோதரர். ஸ்ரீதர்
சகோதரர். ரத்தினம்
சகோதரர்.சத்தியநாதன்
சகோதரர். சத்தீஷ்குமார் எத்திராஜ்
சகோதரர்.ஸ்டாலின்
சகோதரர். அசோக் குமார்
சகோதரர். ஆல்வின் டேனி
சகோதரர். ஜோச:ப் ஜான்
சகோதரர். P.குமார்
சகோதரர். F.தாமஸ்
சகோதரர். தாஸ்
சகோதரர். தன்ராஜ்
சகோதரர். சுனில் ராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

......கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்........ உபா 28:12

திருமதி-திரு. சாமுவேல் ஜான்ஸன்
திருமதி-திரு. ஜோன்ஸ் செல்வாசிங்
திருமதி-திரு. முத்தையா
திருமதி-திரு. சதீஷ்குமார்
திருமதி-திரு. சைமன்
திருமதி-திரு. பக்தராஜ்
திருமதி-திரு. அசோக்குமார்
திருமதி-திரு. சத்தியராஜ்
திருமதி-திரு. ஜெஸ்டின்

# 2011 ஜூலை மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 1-07-2011 | சகோ. ஜெயசேகர் | போதகர். சாமுவேல் |
| 8-07-2011 | சகோ. ஐசக்துரை | போதகர். சாமுவேல் |
| 15-07-2011 | உபவாச ஆராதனை | |
| 22-07-2011 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. ஸ்டாலின் |
| 29-07-2011 | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. கிறிஸ்டோபர் |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 3-07-2011 | Pastor .சாமுவேல் (இந்தியா) |
| 10-07-2011 | Pastor .சாமுவேல் (இந்தியா) |
| 17-07-2011 | சகோ. எபிநேசர் |
| 24-07-2011 | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 31-07-2011 | சகோ. அசோக் குமார் |

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை -**

நாள் 06-07-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு

இடம் : சகோதரி. நகோமி ஜான்ஸன் அவர்கள் இல்லம் (அபுஹலி:ஃபா)

முழு இரவு ஜெபம் -14-07-2011

(இடம்) பரிசுத்த பவுல் ஆலயம்,இரவு 11-00 மணி முதல்

அதிகாலை 3 -00 மணி வரை,

வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 29-07-2011 நேரம் : மாலை **6:30** மணிக்கு

இடம் : சகோதரர் டேவிட்ஸன் அவர்கள் இல்லம் பாஹாஹீல்

# குடும்ப பகுதி

## இயேசுவை மையமாகக் கொண்ட குடும்பம்

எத்தனையோ பல அருமையான சகோதரிமார் குடும்பத்தின் ஆவிக்குறிய பொறுப்புகளை எடுத்திருக்கிறார்கள். புருஷன் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்கு செல்வான். ஆலயத்தின் பல பொறுப்புகளை வகிப்பான், ஆனால் குடும்பத்தில் தேவனுடைய மனுஷன் என்ற நிலையில் செய்ய வேண்டிய கடமைகளை செய்ய மாட்டான். ஒரு சபையில் பொறுப்பு எடுக்க வேண்டியவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது, ' தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (1 தீமத்தேயு 3:4,5)

ஒரு வேளை மனைவியை பார்த்து, நம்முடைய வீட்டில் குடும்ப ஜெபம் நடத்தவேண்டுமென்று சொல்வதே உங்களுக்கு கஷ்டமாக இருக்கலாம். ஏனென்றால் குடும்ப ஜெபம் பண்ணி வருடங்கள் பலதாகிவிட்டது. அதை கவலையீனமாக விட்டுவிட்டீர்கள். கடந்து போன நாட்களை நினைக்க வேண்டாம். மறுபடியும் முயற்சி எடுங்கள், குடும்ப ஜெபம் ஆரம்பியுங்கள். அது உங்கள் குடும்பத்தில் எவ்வளவு மாற்றத்தை கொண்டுவருகிறது என்பதை கவனியுங்கள். அது உங்களது பிள்ளைகளிடத்திலும் மாற்றத்தை கொண்டுவரும்.

உங்கள் வேதத்தை திறந்து ஒரு சங்கீதத்தை வாசித்து ஒரு எளிய ஜெபம் செய்யுங்கள். அது உங்களுக்குள் எவ்வளவு பெரிய மாற்றத்தை கொண்டுவருமென்று நீங்களே கண்டு கொள்ளலாம், குடும்ப ஜெபத்தினால் தீர்க்க முடியாத பிரச்சனை உங்கள் குடும்பத்தில் இருக்கவே முடியாது. உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது என்று எனக்கு தெரியாது. எவ்வளவு பெரிய போராட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று நான் அறியேன், ஆனால் உங்கள் குடும்பத்தை கர்த்தருடைய கரத்தில் ஒப்படையுங்கள் அவர் உங்கள் குடும்பத்தின் தலைவராக இருக்கட்டும். உங்கள் பிள்ளைகளை ஓய்வு நாள் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம், நீங்களே கூட்டிக்கொண்டு போங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு மாதிரியாக நீங்கள் போங்கள். நீங்கள் எல்லாவற்றிலும் பிள்ளைகளுக்கு மாதியாக இருங்கள். முந்தின நாட்களில் ஆலயங்கள் இல்லை, ஓய்வுநாள் பாடசாலை இல்லை, வெளிப்பிரகாரங்கள் இல்லை, வீடுதான் சபையாகவும், ஞாயிறு பள்ளியாகவும் அன்று இருந்தது, இன்றும் பொறுப்பு மாறிவிடவில்லை. ஆகையால் என் அருமை சகோதரர்களே நீங்கள் நல்ல புருஷர்களாய், நல்ல தகப்பன் மாராய், நல்ல தலைவர்களாய், தேவ பிரதிநிதிகளாய், செயல்படுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். மேலும் வேதத்தில் சங்கீத பகுதியில் ஆவியானவரின் அருளால் மொழியப்பட்ட மாதிரி குடும்பம் ஒன்றை பற்றி பார்பபோமா!

**மாதிரிக் குடும்பம்.** சங்கீதம் 128ஐ படியுங்கள்: இதை வாசிக்கும் பொழுதே இக்குடும்பத்தை கற்பனை செய்யுங்கள். இப்பேர்ப்பட்ட குடும்பத்தைக் கர்த்தர் தர வாஞ்சியுங்கள்.

இந்த சங்கீதத்தில் ஒரு மனிதன்தான் கதாபாத்திரம் இதில் '....... நடக்கிறவன் எவனோ ........பாக்கியவான் ...... நீ .....உனக்கு ......உன் மனைவி .....உன் வீடு..... உன் பிள்ளைகள் ........உன் பந்தி .... உன்னை ஆசீர்வதிப்பார் .... நீ ஜீவனுள்ள நாளெல்லாம்........ நீ உன் பிள்ளை .... என வார்த்தைகள் வருவதை காண்கிறோம்.

இந்த மனிதன்தான் குடும்பத்தலைவன் அவனை தேவன் தன் ஆளாக பார்கிறார். தனக்கும் உலகிலுள்ள குடும்பங்களுக்கும் இணைப்பாக ஆசாரியனாக கர்த்தர் காண்கிறார். இவன் தேவனுடைய பார்வையிலும், மனிதர்களுடைய பார்வையிலும், குடும்பத்தின் பார்வையிலும் மிகவும் உயர்ந்தவன். இவன் கர்த்தருக்கு பயந்தவன் - நோவாவை போல, ஆபிரகாமை போல, பரிசுத்தவான்களைப் போல, கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன், மெய்யாய் ஆசீர்வதிக்கப்பட்டவன். இவன் பயப்படுகிறவன் மாத்திரமல்ல, அவர் வழியில் நடக்கிறவன். தன் குடும்பத்தை நடத்துகிறவன்.

ஆராதனைகளில் பங்கெடுப்பதில், கர்த்தரின்சேவையில் குடும்பத்தை வேத சத்தியத்திலே நடத்துவதில் முனைந்து நிற்கிறான், மனைவி பிள்ளைகளை போஷித்து காப்பாற்றுகிறான், அவர்களை நேசித்து பராமரிக்கிறான், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் நடத்துகிறான் உங்கள் கற்பனையில் இவர் மலைபோல் உயர்ந்து நிற்கிறார் அல்லவா?

இப்பொழுது அவர் பக்கத்தில் நிற்பது யார் என்று கவனியுங்கள். இவள்தான் அவரது வாழ்க்கை துணைவி அவள் தன் ஆசையை அவன் பேரிலேயே வைத்திருக்கிறாள் அவள் நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அவரைத் திருப்திப்படுத்தும் மாதும் ஆகிறாள், தேவனால் அருளப்பட்டவள். அவள் தன் கணவனுக்கு எல்லா காரியத்திலும் கீழ்படிந்திருக்கிறாள், அவரை திருப்தி செய்வதிலும், சந்தோஷபடுத்துவதிலும் கருத்தாய் இருக்கிறாள். கணவனை ஒருவர் புகழ்த்தும்பொழுது தன்னை புகழ்த்துவதாக எண்ணி மகிழ்கிறாள். கணவனின் வாழ்வில் தன் வாழ்வை காண்கிறாள். அவளது ஊற்றின் தண்ணீர் தெருவிலே பாய்வதில்லை, அது அவள் கணவனுக்கே உரியது. அவள் அவளது குடும்பத்திற்கு அழகிய கனிகளை கொடுக்கிறவளாக இருக்கிறாள்.

அவளால் அனேக ஏழைகள் பயன்பெறுகிறார்கள். அவள் பிள்ளைகளை கருத்தாய் வளர்கிறாள். விருந்தினரை உபசரிக்கிறாள், கணவர் அவள் நிமித்தமாய் சந்தோஷப்படுகிறார், அவள் அவன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைசெடி, திராட்சைரசம் சந்தோஷம் தரும். (இன்னும் தொடரும்)

# சங்கீத புத்தகங்களை குறித்து தொடர்ந்து தியானிப்போம்

## சங்கீதம்

ஒரு விசுவாச ஜெபத்தின் மூலமாகவும், துதியின் மூலமாகவும், இறைவனோடு ஐக்கிய படலாம் என்பதை இந்நூல் உறுதிப்படுத்துகிறது.

### தீர்க்கதரிசனமும், நிறைவேறுதலும்

(சங்கீதம் – தீர்க்கதரிசனம்) புதிய ஏற்பாடு (நிறைவேறுதல்)

சங்கீதம் 2:7 நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்

மத்தேயு 3 :17 இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

சங்கீதம் 8:6 சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்

எபி 16:6, 7 சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார்.

சங்கீதம் 16:10 என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்

மாற்கு : 16:6, 7 – அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள் அவர் உயிர்த்தெழுந்தார் அவர் இங்கேயில்லை இதோ, அவரை வைத்த இடம். நீங்கள் அவருடைய சீஷிரீடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான்

சங்கீதம் 22:1 என் தேவனே, என்தேவனே, ஏன் என்னை கைவிட்டீர் ?

மத்தேயு 27: 46 ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூடப்பிட்டார் அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

சங்கீதம் 22:7, 8 என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும் இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்

லூக்கா 23:35 ஜனங்கள் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடனேகூட அதிகாரிகளும் அவரை இகழ்ந்து: இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும் என்றார்கள்.

(இன்னும் தொடரும்)

# வாலிபர் பகுதி

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் இந்த செய்தி மலர் மூலம் மீண்டும் உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்

**கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்பும் வாலிப சகோதர சகோதரிகளுக்கு**

**ஓர் அறிமுகம்**

கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கிறேன். லீதியாளின் மனக்கண்களை திறந்த தேவன் உங்கள் மனக்கண்களையும் திறந்தருள்வாராக. ஒரு பிரசங்கியின் நோக்கம் என்னவென்றால் தேவனின் இருதயத்தில் உள்ளதை கேட்போரின் உள்ளத்தில் வைப்பதே பிரசங்கியின் பொறுப்பு. தேவன் எதை சொல்லவிரும்புகிறாரோ அதை நமது பிரசங்கத்தின் மூலம் கேட்போரை சென்று அடையவேண்டும். இல்லாவிட்டால் நாம் செய்தது பிரசங்கம் அல்ல. நம்முடைய பிரசங்கம் எப்பொழுதும் ஒன்று போல இருக்கக்கூடாது. இது கடைசிக்காலமாயிருக்கிறபடியால் பரிசுத்த ஜனங்களுக்கும் எல்லா மக்களுக்கும் இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் வருகையை நினைப்பூட்டவேண்டும்.

இராஜாவாகிய இயேசு சொன்னார் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும், பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார். இந்த வசனத்தை நாம் சிந்திந்து பார்க்கவேண்டும். போதிக்கிறவர்களாகிய நாம் நம்முடைய பிரசங்கத்தை கேட்கிற தேவனுடைய ஜனங்களுக்கு குறைவில்லாமல் சத்தியத்தை வழங்கும்படியாக நம்முடைய இருதயமென்னும் பொக்கிஷசாலையில் வேத வசனமாகிய முத்துக்களை சேர்த்து வைத்தல் அவசியம். அப்படி பொக்கிஷசாலையை நிரப்பி வைத்திராதவர்கள் பிரசங்கம் செய்பவர்களாக இருக்கவேண்டிய நிலையை விட்டுவிட்டு பிரசங்கத்தை கேட்பவர்களாக மாற்றப்படுவார்கள்.

ஏதோ தெரிந்ததை பிரசங்கித்துவிட்டால் போதும் என்று எண்ணிவிடாதீர்கள். நம்முடைய பிரசங்கத்தை கேட்போர் கேள்விகளுக்கும் பதில் சொல்ல தெரிய வேண்டும். நம்முடைய அருள்நாதர் இயேசுகிறிஸ்துவினிடத்தில் சாத்தான் வசனங்களை காட்டியே சோதித்தான். நம்முடைய இயேசு வசனங்களை காட்டியே அவனை விரட்டினார். அதுமட்டுமல்ல வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் வந்து கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். இயேசுவே வசனங்களை காட்டியே அவர்களின் வாயை அடைத்தார். பலமுறை அவருடைய சீஷர்கள் உட்பட அநேகர் அவரிடம் வந்து விளக்கம் கேட்டார்கள் அவரோ வேதவசனங்களாலும், உவமைகளாலும் அவர்களுக்கு புரியும்படி விளக்கினார். பழைய ஏற்பாட்டிலே ஆசாரியனாகிய எஸ்றா கற்று தேர்ந்த வேதபாரகனாயிருந்தான் என்று எழுதப்பட்டுள்ளது. நீங்கள் வேதத்தில் தேறினவர்களாக இருந்தால்தான் மற்றவர்களை தேறினவர்களாக்கமுடியும் அதாவது தேர்ச்சி பெற வைக்கவும் முடியும். எனவே பிரசங்கிப்பவர்கள் வேதவாசிப்பிற்கு

அதிகமான முக்கியத்துவத்தை கொடுங்கள்.

கர்த்தருடைய புத்தகத்தை தேடி வாசிக்க வேண்டும். வேதவசனங்களை நிதானமாக ஆராய்ந்து பார்த்து வாசிக்கவேண்டும். வருங்காலங்களில் ஊழியராகபோகும் நாம் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை எல்லா வசனங்களையும் வாசித்திருக்கவேண்டும். நமக்கு எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும் தினந்தோறும் வேதம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உண்மையாகவே வேதத்தில் சில பகுதிகள் விறுவிறுப்பாக இருக்கும். சில பகுதிகள் கிறுகிறுப்பாகதான் இருக்கும். ஆனாலும் நாம் எந்த பகுதியையும் நாம் அசட்டை செய்யக்கூடாது. ஒரு இடத்தில் வரலாறு இருக்கும். மற்றொரு இடத்தில் வம்சவரலாறு இருக்கும் ஆனால் அதிலும் விலையேறப்பெற்ற முத்துக்கள் இருக்கும். உதாரணமாக 1நாளாகமம் முதல் 8அதிகாரங்களில் அவன் அவனை பெற்றான் இவன் இவனை பெற்றான் என்று தான் வரும். இதை வாசிக்கிற நீங்கள் எவன் எவனை பெற்றால் எனக்கென்ன என்று அப்படியே புரட்டிவிட்டீர்களானால் நீங்கள் மிகப்பெரிய முத்தை தவறவிடுவீர்கள். அந்த வம்ச வரலாறு அட்டவணைக்குள்ளே யாபேஸ் என்கிற அருமையான மனிதரை குறித்தும் அவருடைய அற்புதமான ஜெபத்திற்கு தேவன் ஜெயத்தை கொடுத்ததை பற்றியும் 1நாளா 4:9,10 வசனங்களில் கர்த்தருடைய ஆவியானவர் அழகான காரியத்தை விளக்குகிறார். இப்படி முறையாக நீங்கள் வேதத்தை வாசித்து பழகவேண்டும். உங்களை ஈர்க்கிற வேதபகுதிகளை கோடிட்டுகொள்வது நல்லது. உதாரணமாக நீங்கள் இப்போது யோவான் இரண்டாம் அதிகாரம் படிக்கிறீர்கள் என்றால் அதில் நீங்கள் இயேசு கானா ஊரில் செய்த அற்புதத்தை படிப்பீர்கள் உடனே ஒரு பென்சிலை கொண்டு மேற்பகுதியில் கான ஊர் கல்யாணம் என்று எழுதி கொண்டால் நீங்கள் மறந்து போக மாட்டீர்கள்.

வேதத்தை நீங்கள் வாசிக்கும்போது அநேக காரியங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது பேப்பரில் எழுதிக்கொள்ளவேண்டும். உதாரணமாக நீங்கள் ஆதியாகமத்தை படிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம் ஆதி3:6ல் வருகிற அந்த விருட்சம் பார்வைக்கும் இன்பமும் என்று கண்டு வாசிக்கிற நீங்கள், ஏவாளின் விழுகைக்கு கண்களின் இச்சை காரணம் என்று உணருவீர்கள். அடுத்து தொடர்ச்சியாக படிக்கும்போது ஆதி13:10ல் அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து.. எகிப்து தேசத்தை போலவும் இருந்தது என்ற வசனத்தையும் படிக்கும்போது இங்கேயும் கண்களின் இச்சைதான் காரணமா என யோசித்து குறிப்பு எடுத்துக்கொள்ளவேண்டும். மறுபடியும் தொடர்ந்து நீங்கள் படித்தால் ஆதி25:30ல் ஏசா யாக்கோபை நோக்கி அந்த சிவப்பான கூலில் எனக்குத்தா என்றான். இதையும் படிக்கும்போது இங்கேயும் கண்களின் இச்சைதானா என்பதை குறிப்பு எடுத்துகொள்ளவேண்டும். இப்படி நீங்கள் நிதானமாக வேதத்தை ஆராய்ந்து படித்தால் உங்கள் இருதயம் என்னும் பொக்கிஷ சாலை வேத வசனத்தால் நிரம்பியிருக்கும். (தொடரும்) இப்படிக்கு

இராஜாவின் பணியில் மினா அப்துல்லா கேம்ப் சகோதரர்கள்

# சகோதரிகள் பகுதி

## PRAISE THE LORD

## சோதனையில் வெற்றி

அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் ஒவ்வொருவரையும் செய்தி மலர் மூலம் சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது நமக்கு வரும் சோதனையில் இருந்து வெற்றி பெறுவது, எப்படி? என்பதை பற்றி தியானிப்போமாக!

### சோதனை என்றால் என்ன?

ஒரு மனிதன் தவறு செய்யும்படி தூண்டுவதே சோதனை, வாழ்க்கையில் தவறான முடிவுகளை எடுக்கும்படியாக சாத்தான் நம் மனதில் யோசனையை தருவதும் சோதனைதான், பரிசுத்தத்தையும், விசுவாசத்தையும், அழிக்க முற்படும் ஆயுதமே சோதனை, சோதனை வருவதற்கு முன்னதாக நம்முடைய உள்ளத்தின் ஆழத்தில் ஆவியானவருடைய எச்சரிக்கை ஒலி வருகிறது, மனசாட்சியில் தாக்குதல் வருகிறது, இந்த இடத்துக்கு செல்லாதே, இந்த நபரிடம் பேசுவதை குறித்து ஜாக்கிரதையாகயிரு, அங்கே பார்க்காதே, இங்கே பார்பதை தவித்துவிடு, என்று கர்த்தர் ஆவியானவரின் மூலம் எச்சரிக்கிறார்.

சோதனையில் விழும் போது மனசாட்சி வாதிக்கிறது, உற்சாகத்தை இழக்கிறோம், ஜெப ஜீவியத்தையும் ஆதி அன்பிற்கும் தூரமகிறோம். பெரிய சோதனையில் விழுந்தவர்கள் தலையை நிமிர்ந்து நடக்க முடியாமல் மானம் மரியாதை எடுக்கப்பட்டு போய் அவமான சின்னங்களாக தலைகுனிந்து நடக்கிறார்கள்.

### எங்கிருந்து சோதனை வருகிறது?

**1. மாமிசத்தில் இருந்து சோதனை 2. சாத்தானிடத்திலிருந்து 3, தேவனிடத்திலிருந்து.**

<u>முதலில் மாமிசத்தில் இருந்து சோதனையை பற்றி பார்ப்போம்</u> :- மனிதனுடைய சரீரத்திலுள்ள ஒவவொரு அனுக்களும், பாவத்தை நோக்கி இச்சிக்கிறது,கண்கள் கண்டவைகளையும் மாம்ச இச்சைகளையும் நிறைவேற்றி சுகம் அனுபவிக்க விரும்புகின்றன,(யாக் 13:15)ல் அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான், பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கும் என்று வாசிக்கிறோம், ஆம் தேவனுக்கு அன்பானவர்களே எந்த ஒரு மனுஷனை மாம்சமாகிய பாவ பிரமானம் மேற்கொள்ளுகிறதோ அவன் நிர்பந்தமான மனுஷனாய் மாறுகிறான், பாவ சோதனைக்குள் விழுந்து விடுகிறான்.

<u>இரண்டாவதாக சாத்தானால் வரும் சோதனையை பற்றி பார்ப்போம்</u>:- மத் 4:3ல் சாத்தானை சோதனைகாரன் என்று வாசிக்கிறோம். சாத்தானுடைய தந்திரங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவர் மேல் முழு விசுவாசம் வைக்காமல். எதற்க்கெடுத்தாலும் சந்தேகப்பட்டுக்கொண்டிருபவர்களுக்குள் சாத்தான் எளிதாய் புகுந்துவிடுவான். ஆதலால் சாத்தானையும், அவன் தந்திரங்களையும் அறிந்து கொள்ளவேண்டும். சாத்தான் கொண்டுவருகிற சோதனை நம்மை கீழே விழச்செய்து அவமானப்படுத்தி, பெயரை கெடுத்து விசுவாசத்தை அழிப்பதற்காக கொண்டு வரப்படுகிறது.

<u>மூன்றாவதாக தேவனிடத்தில் இருந்து வருகிற சோதனையை பற்றி பார்ப்போம்:-</u>

ஆண்டவரிடத்தில் இருந்து வருகிற சோதனை பரீட்சை என்ற பதத்தில் பயன்படுத்தி ஆண்டவர் நம்மை பரிசோதிக்கிறது அதன் மூலம் ஒரு முன்னேற்றத்தை, உயர்வை, மேன்மையை, ஆசீர்வாதத்தை தந்தருள்கிறார். ஆதி 22:1ல் தேவன் ஆபிரகாமை சோதித்தார் என்று வாசிக்கிறோம். அதாவது சோதனை என்பது பரீட்சை, சோதனையை ஜெயிப்பது எப்படி? சோதனைகளும் பிரச்சனைகளும் அலைமோதும் பொழுது துக்கப்பட்டு சோர்ந்து போய் விக்கூடாது, எந்த விதத்திலும், பாவத்திற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது. முறுமுறுத்து தேவனைவிட்டு தூரமாய் போகாமல் கர்த்தருடைய கிருபைக்கு காத்திருப்போமானால் சோதனையை மேற் கொள்ள முடியும்

## சோதனையை ஜெயிக்க நான்கு வழிகள்.

**1. விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்:-**மத் 26:11. நீங்கள் சோதனைக்குட்படுத்தாத படி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று வாசிக்கிறோம். தனியாக ஆண்டவரோடு உறவாடுகிற ஜெபம்தான் நம்முடைய உள்ளான மனுஷனில் பெலத்தை கொண்டுவரும், சோதனைவரும் போது ஊக்கமான ஜெபத்திற்கு சென்றுவிட வேண்டும். கர்த்தாவே நான் பாவம் செய்ய கூடாது, குறிப்பிட்ட பாவ இச்சைகள் என் மேல் மோதுகிறது, எனக்கு பெலன்தாரும், என்னை தப்பியும் என்று மன்றாடும் போது அவர் நம் கால்களை நிலைபடுத்துகிறார். நமது கால்கள் சறுக்கும் போது அவருடைய கிருபை நம்மை தாங்கி கொள்கிறது.

**2. விசுவாசமுள்ளவர்களாய் இருங்கள்.:-** 1 யோவன் 5:4ல் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயக்கிற ஜெயம் என்று வாசிக்கிறோம், கர்த்தர் பெயரில் அசைக்க முடியாத விசுவாசம் வைத்திருக்கிறவனை எந்த சத்துருவின் சோதனைகளும் அசைக்க முடியாது. அவன் கர்த்தரில் உறுதியாய் இருக்கிறான். அவனுக்குள் இருக்கும் தேவ பெலத்தோடு சாத்தானை எதிர்க்க முடியும்.

**3. தேவ வசனங்களை பற்றிக் கொள்ளுங்கள்:-** சங் 119:1 நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன் என்று வாசிக்கிறோம். வேத வசனம் நம் இருதயத்தில் வாசம் பண்ணட்டும். ஆவியும் ஜீவனுமான வசனம் நம் உள்ளத்தில் வாசம் செய்யுமானால் நாம் பாவம் செய்ய முடியாது. வேத வசனம் வல்லமை பிசாசானவனை தடை செய்யும். வசனத்தை மனதில் பதிய வைப்பதுடன் அல்லாமல் அதற்கு கீழ்படிய வேண்டும்

**4. ஆவியானவரை சார்ந்து கொள்ளுங்கள்:-** சகரியா 4:6 பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும். என்று வாசிக்கிறோம். ஆம் பரிசுத்த ஆவியானவரினால் ஜெயிக்க முடியாத சோதனை ஒன்றுமில்லை,ஆவியானவருடை நிரப்புதல் இல்லாமல் வெற்றி வாழ்க்கை செய்வது கடினம், அவருடைய ஒத்தாசையோடுதான் மாம்ச இச்சைகளை அழிக்க முடியும்.

ஆம் எனக்கன்பானவர்களே நாம் சோதனையில் விழுந்து விடக்கூடாது, சோதனைக்கு அடிமையாகிவிடக்கூடது. முற்றிலும் ஜெயம் கொள்ள வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். கர்த்தருடைய தூதர்கள் நாம் ஜெயம் கொள்ள நமக்கு துணை நிற்கிறார்கள். கர்த்தர் நாம் சோதனையில் இருந்து தப்புவதற்கான மார்க்கங்களை நமக்கு உண்டுபண்ணி வைத்திருக்கிறார்.

சோதனையை ஜெயிப்போம்! ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வோம்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**அனுஷூயா டேவிட்சன்**

# கடந்த மே மற்றும் ஜூன் மாத நிகழ்வுகள்

கடந்த மே மாதம் சபையின் மூலம் தாய்மார்கள் தின ஆராதனை நடத்தப்பட்டது

அந்த நிகழ்ச்சியின் ஒரு சில புகைபடம் தங்களின் பார்வைக்கு















குழந்தை பிரதிஷ்டையும் நடைபெற்றது

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷுயா டேவிட்ஸன்

23922536 - 97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058- 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது